(முழுப்பதிப்புரிமையுடையது)
[All rights Reserved]

தரம் 3

# இரண்டாம் தவணை இறுதிக் கணிப்பீடு - 2024

புள்ளி

## தமிழ் மொழி

சுட்டெண் : ..............................

நேரம் : 1:00 மணித்தியாலம்

01. பந்தியைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

கிளிகள் மரப்பொந்துகளிலேயே வசிக்கின்றன. இவை பழங்கள், விதைகள், பூக்களின் மொட்டுக்கள் போன்றவற்றை உண்கின்றன. கிளியின் அலகு பலம் வாய்ந்தது. பறவைகளிலே கிளி பேசும் தன்மை வாய்ந்தது.

1) கிளிகள் எங்கே வசிக்கின்றன? : ..............................
2) இவை எவற்றை உண்கின்றன? : ..............................
3) கிளியின் அலகு எவ்வாறானது? : ..............................
4) பேசும் தன்மை வாய்ந்த பறவை எது? : ..............................
5) "பழம்" என்பதன் பன்மை வடிவம் என்ன? : ..............................

(5 × 2 = 10 புள்ளிகள்)

02. பொருத்தமான இளமைப் பெயர்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| குஞ்சு | பிள்ளை | நாற்று | குருளை | குட்டி |

1) சிங்கம் தனது .............................. களுடன் குகையில் வசித்தது.
2) எலியின் .............................. கள் வளையில் விளையாடின.
3) அப்பா நட்ட வாழை .............................. ஈன்றது.
4) உழவர்கள் வயலில் .............................. நட்டனர்.
5) அணில் .............................. தாயுடன் சேர்ந்து ஓடியது.

(5 × 2 = 10 புள்ளிகள்)

03. தரப்பட்ட வாக்கியங்களை பொருத்தமான காலத்துடன் இணைக்குக.

1) குதிரை ஓட்டப்போட்டியில் தோல்வியடைந்தது
2) பெண்குயின்கள் நீரில் இரை தேடுகின்றன
3) மண்சரிவால் மக்கள் இறந்தனர்
4) நான் பாட்டுப் பாடுவேன்
5) கடற்கரையில் மக்கள் கூட்டமாக நிற்கின்றனர்
6) தொலைவில் மூவர் வருகின்றனர்

இறந்தகாலம்

நிகழ்காலம்

எதிர்காலம்

(6 × 2 = 12 புள்ளிகள்)



kalvi.lk

04. தரப்பட்ட குறியீடுகளின் கருத்தினை எழுதுக.

1) 


......................................................................................................

2) 

......................................................................................................

3) 

......................................................................................................

4) 

......................................................................................................

(4 × 3 = 12 புள்ளிகள்)

05. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.

1) வாழ்வே / செல்வம் / நோயற்ற / குறைவற்ற

......................................................................................................

2) தெரியும் / அழகு / முகத்தில் / அகத்தின்

......................................................................................................

3) எழுத்து / கல்வி / இளமையிற் / சிலையில்

......................................................................................................

4) மட்டு / புத்தி / ஆத்திரக்காரனுக்குப்

......................................................................................................

5) பொன்னல்ல / மின்னுவதெல்லாம்

......................................................................................................

(5 × 2 = 10 புள்ளிகள்)

06. வாக்கியம் அமைக்குக.

1) ஊன் : ......................................................................................................

......................................................................................................

2) ஊண் : ......................................................................................................

......................................................................................................

(2 × 2 = 04 புள்ளிகள்)



kalvi.lk

07. பின்வரும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்க.

## பொதுசன நூலகம்

### சிறுவர் பகுதி அங்கத்துவ விண்ணப்பம்

நகர எல்லைக்குள் வசிக்கும் / கல்வி கற்கும் வயது 14 வருடங்களுக்குக் கீழ்ப்பட்டவராகிய நான், பொதுசன நூலக விதிகளிற்கும் பிரமாணங்களிற்கும் அமைவாக சிறுவர் பகுதி அங்கத்தவராக இணைவதற்கு விண்ணப்பிக்கிறேன்.

1) முழுப் பெயர் : ..............................................................................

2) முகவரி : ..............................................................................

3) பாடசாலை பெயர் : ..............................................................................

4) பிறந்த திகதி : ..............................................................................

அங்கத்தவராக அனுமதிக்கப்பட்டால் நூலக விதிகளுக்கு அமைவாகச் செயற்படுவேன் என உறுதிப்படுத்துகிறேன்.

5) ..................................................

விண்ணப்பதாயின்
கையொப்பம்

(5 × 2 = 10 புள்ளிகள்)

08. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) கிளித்தட்டு விளையாட்டில் விளையாட இறங்கும் அணியினரை ............................ என்பர். (கிளி / காய்)

2) ஆயிரம் நூல் பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம். அது ............................ (இடியப்பம் / தேங்காய்)

3) மறவாதே எனும் அறப்பாடலைப் பாடியவர் ............................ (அழ. வள்ளியப்பா / தே.வ. பெருமாள்)

4) அன்பையும் நட்பையும் வெளிப்படுத்த நாம் ............................ (கைகளைக் / கால்களைக்) குலுக்குகிறோம்.

5) வரிக்குதிரைகள் மிக வேகமாக ஓடும் ............................ (கூட்டம் / ஆற்றல்) வாய்ந்தவை.

(5 × 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

09. விடை தருக.

i) ஒத்த சொல் தருக.

1) ஆணவம் - .............................. 2) மனம் - ..............................

(2 × 2 = 04 புள்ளிகள்)

ii) எதிர்ச் சொல் தருக.

1) சரி - .............................. 2) வாழ்வு - ..............................

(2 × 2 = 04 புள்ளிகள்)

iii) சேர்ந்து எழுதுக.

1) நாய் + குட்டி - .............................. 2) நீலம் + வானம் - ..............................


(2 × 2 = 04 புள்ளிகள்)

iv) பிரித்து எழுதுக.

1) மரப்பொந்து - ............... + ............... 2) பாலைவனம் - ............... + ...............

(2 × 2 = 04 புள்ளிகள்)

10. காட்சிப்படத்தை அவதானித்து நிகழ்காலத்தில் மூன்று சொற்களுக்குக் குறையாது வாக்கியங்கள் அமைக்குக. (எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக அமைந்திருத்தல் வேண்டும்)



1) ..............................................................................................................................

..............................................................................................................................

2) ..............................................................................................................................

..............................................................................................................................

3) ..............................................................................................................................

..............................................................................................................................

(3 × 2 = 06 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page